335

டாக்டர். கே. கோபால், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர் மற்றும்
தலைவர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள்,

தலைவர்அலுவலகம்,
போக்குவரத்துத் துறை.
தலைமைச் செயலகம்,
சென்னை – 09.

கடித எண். 453 /Ch2/Ch.0/2022,

நாள்: 10/01/2022

பெறுநர்
அனைத்து மேலாண் இயக்குநர்கள்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள்,

பொருள்: மாற்றுத் திறனாளிகள் பேருந்துகளில் பயணம் செய்யும் பொழுது ஓட்டுனர் மற்றும் நடத்துனர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் – அறிவுறுத்தல் – தொடர்பாக.

-----

<u>நிலையான இயக்க நடைமுறைகள்</u> (Standard Operating Procedures)

1. மாற்றுத் திறனாளி பயணிகள் பேருந்திற்காக பேருந்து நிறுத்தத்தில் நிற்கும் போது பேருந்தை முறையாக நிறுத்தி மாற்றுத் திறனாளி பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டும். ஒரு மாற்றுத் திறனாளி நின்றாலும் பேருந்தை நிறுத்தி ஏற்றிச் செல்ல வேண்டும்.

2. ஓட்டுநர் பேருந்தை பேருந்து நிற்பதற்கு என அறிதியிடப்பட்டுள்ள பேருந்து நிறுத்தத்தில் தான் நிறுத்தப்பட வேண்டும். பேருந்தை நிறுத்தத்திற்கு முன்போ/தாண்டியோ நிறுத்தி மாற்றுத் திறனாளிகளுக்கு இடையூறு செய்யக் கூடாது.

3. நடத்துனர் வேண்டும் என்றே பேருந்தில் இடமில்லை என்று ஏறும் மாற்றுத் திறனாளி பயணிகளை பேருந்தில் இருந்து இறக்கிவிடக் கூடாது.

4. மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கையில் பயணிகள் வேறு யாராவது அமர்ந்து இருந்தால், அவர்களை இருக்கையில் இருந்த எழச் செய்து, மாற்றுத் திறனாளியை அமர வைக்க வேண்டும்.

5. மாற்றுத் திறனாளி பயணிகளிடம் எரிச்சலூட்டும் வகையில் கோபமாகவோ, ஏளனமாகவோ, இழிவாகவோ பேசக்கூடாது.

6. பேருந்தில் மாற்றுத் திறனாளி பயணிகளை உபசரிப்புடனும், அன்புடனும் நடத்த வேண்டும்.

7. மாற்றுத் திறனாளி பயணிகள் ஏறும் போதும், இறங்கும் போதும் கண்காணித்து ஓட்டுனருக்கு சமிக்ஞை (Signal) செய்து பாதுகாப்பாக ஏற்றி இறக்க வேண்டும்.

8. இந்திய அரசு அறிவித்த மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய தேசிய அடையாள அட்டையின் (Unique Disability ID) Card and National Disability Identity Certificate Cards (NDIC) அசல் அட்டை கொண்டு, 40 சதவீதம் மாற்றுத் திறன் மற்றும் அதற்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது துணையாளர் (Escort)

ஒருவருடன் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் (White board) மட்டும் கட்டணமில்லா பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும். இவர்கள் இருவருக்கும் உரிய இலவச பயணச் சீட்டினை பேருந்து நடத்துனர் வழங்க வேண்டும்.

9.அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளும் பாகுபாடின்றி மாநில முழுவதும் பேருந்துகளில் பயண எண்ணிக்கை உச்சவரம்பின்றி, 75% பயணக் கட்டண சலுகையில் பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும்.

ஒப்பம்/–
தலைவர்

உண்மை நகல்/ உத்தரவு படி/அனுப்பப்டுகிறது

தனி அலுவலர்